1974 மார்ச் 11]

திரு. கே. டி. கே. தங்கமணி : இப்போது டிராபிக் என்போர்ஸ்மென்டைப் பொறுத்த வரை மாணவர்கள் போலீசாருக்கு உதவியாக இருக்கிறார்கள். அதுவும் இந்தத் திட்டத்தின் கீழ் வருகிறதா ? அப்படியானல், கல்லூரிகளில் இருக்கக்கூடிய மாணவ மாணவிகளுக்கும் கூட இதில் இடம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தின் அடிப்படையில் இப்போது சில மாணவர்கள் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க விதி முறைகளை அனுசரிப்பதில் ஈடுபட்டிருக்கிறார்கள். கல்லூரியில் உள்ளவர்கள் அவர்களாகவே முன் வந்தால் அவர்களுக்கும் இந்தப் பயிற்சியை அளிக்கலாம். போக்குவரத்தில் ஏற்படுகிற ஆபத்தினை உணர்த்தி, எந்த எந்த முறையில் விதிகளைப் பின்பற்ற வேண்டும் என்கிற உணர்வினை அளிக்கின்ற முறையில்தான் இப்போது இந்தத் திட்டம் அமல் செய்யப்படுகிறது.

திரு. முனு ஆதி : தலைவர் அவர்களே, தாம்பரத்தில் இருந்து நானும் வரும்போது பார்க்கிறேன். போக்குவரத்து வண்டிகளை அங்கங்கே நிறுத்தி மேல் கூரையில் 20 மூட்டைகளுக்குமேல் கூரையே பிய்ந்து விழுந்து விடுமோ என்று அஞ்சுகிற முறையில் போட்டு வருகிறார்கள். இதனால் விபத்து ஏற்படக்கூடிய வாய்ப்பு இருப்பதனால் இந்த முறை தவிர்க்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அத்தகைய ஆபத்து எதுவும் நிகழ்ந்ததாக இதுவரை இல்லை. ஆயினும் மாண்புமிகு உறுப்பினர் அதுபற்றிய தகவலை என் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஒரு குறிப்பிட்ட நபர் இவ்வளவு எடைக்கு மேல் எடுத்துப் போகக் கூடாது என்கிற விதி இருக்கிறது. இதை எப்படி எடுத்துப் போகிறார்கள் என்பதை கவனிக்கிறேன்.

ஆரம்பாக்கத்திலிருந்து பேருந்துப்பணி.

* 367 வினா—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கும்முடிப்பூண்டி துணை வட்டம், ஆரம்பாக்கம் முதல் திருவள்ளூருக்கும்—பொன்னேரிக்கும் பேருந்துப் போக்குவரத்து ஏற்படுத்துவதில் ஏற்படும் காலதாமதத்திற்கும் காரணங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பொன்னேரி, கும்மிடிப்பூண்டி, ஊத்துக் கோட்டை, திருவள்ளூர் ஆகிய இடங்களில் கிளை பணி மனைகளைக் கட்டுவதற்கான நிலம் கையகப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவ்விடங்களில் பணி மனைகள் கட்டி முடிக்கப்பட்ட பின்னரே, ஆரம்பாக்கம், திருவள்ளூர், பொன்னேரி ஆகிய இடங்களை இணைக்கும் வகையில் புதிய பேருந்துகள் விடுவது பற்றி பல்லவன் போக்குவரத்து கழகம் பரிசீலிக்க இயலும்.

திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, இந்த ஆரம் பாக்கம் ஆந்திரத்தின் எல்லையைக் கடந்து தமிழ்நாட்டின் ஒரு பகுதியாக இருப்பதனால் ஆந்திர எல்லையைத் தாண்டிப் போக வேண்டிய நிலைமை இருக்கிறது. ஆகவே, மீண்டும் இதைப் பரிசீலனை செய்து ஆரம்பாக்கத்தி லிருந்து திருவள்ளூர்,—பொன்னேரிக்கு பஸ்கள் விட அரசு விரைவு படுத்துமா ?

மாண்புமிகு திரு. ச இராமச்சந்திரன் : விரைவுபடுத்தப்படும்.

Appointments in temples.

* 368 *Q.*—THIRU A. PARANDHAMAN, PULAVAR C. PALANISAMY : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state whether the Government have issued specific instructions to the Devasthanam Authorities in Tamil Nadu to the effect that persons belonging to Backward Classes and Scheduled Castes must be considered for appointment and that the percentage fixed by the Government in that regard must be followed ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : பின்தங்கிய வகுப்பினர்கள் ஆலயங்களில் ஏற்கெனவே ஊழியம் செய்து வருகிறார்கள். ஆகவே, அவர்கள் நியமனத்திற்குப் பிரத்தியேகமாக அறிவுரை ஏதும் தேவை யில்லை. ஆலயங்களில் தாழ்த்தப்பட்ட வகுப்பினர்களை ஊழியர்களாக நியமிப்பதைக் கட்டாயப்படுத்த இந்து அறநிலைய பாதுகாப்புச் சட்ட விதிகளை திருத்த செயற்குறிப்பு ஒன்று அரசின் பரிசீலனையில் உள்ளது.

புலவர் சி. பழனிச்சாமி : பழனி ஆலயத்தை எடுத்துக் கொண்டால், பணியாளர்களை நியமிப்பதில் இந்த 18 சதவிகிதம் தாழ்தப்பட்டவர் களுக்கு என்கிற விகிதாசாரம் பின்பற்றப்படவில்லை. இதுவரை, ஏறத்தாழ 90 வழிகாட்டிகளை நியமித்துள்ளார்கள். இந்த 90 பேர்களில் ஒருவர் கூட தாழ்த்தப்பட்டவர் கிடையாது. நான் அறங்காவலராக இருந்து சொல்லியும் கேட்கவில்லை. ஆகவே, எல்லாக் கோவில்களிலும் 18 சத விகிதம் தாழ்த்தப்பட்டவர்களை நியமிக்க வேண்டுமென்று அரசு ஆணை அனுப்புமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : கோயில் ஊழியர்களை நியமனம் செய்யும்போது தாழ்த்தப்பட்டவர்கள் நியமிக்கப்பட வேண்டுமென்று ஆணையாளர் அவர்களால் அறிவுரை கூறப்பட்டிருக்கிறது. அந்த அறி வுரை பல இடங்களில் பின்பற்றப்படவில்லை என்கிற காரணத்தினால் சட்டம் திருத்தம் செய்யலாமா என்பது பற்றி அரசாங்கம் ஆலோசனை செய்து கொண்டிருக்கிறது.

திருமதி வி. ப. பழனியம்மாள் : தாழ்த்தப்பட்டவர்கள் அர்ச்சகர் களாக நியமிக்கப்படுவதற்கு என்ன என்ன தகுதிகள் வேண்டும் ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி ஆலயப் பணியாளர்களைப் பற்றியது. அர்ச்சகர்களைப் பற்றியது அல்ல.